# ஸ்ரீகிருஷ்ண கான சபாவின் ஸ்வர்ண ஜெயந்தி துவக்கவிழாவில் திரு. சுப்புடுவின் பாராட்டுரை

பிரபல ஆங்கில நாவல ஆசிரியர் சார்லஸ் டிக்கன்ஸ, அவருடைய படைப்புகளில் Pickurick Papers என்கிற நாவலில் The Permanent President of the Pickurickian Club என்கிற ஒரு பாத்திரம் உண்டு. யாக்ஞரான சபா, மன்னிக்கவும், கிருஷ்ண கான சபா நிரந்தர காரியதரிசி ஸ்ரீமான் யாக்ஞராமனைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு அந்த ஞாபகம் தான் வரும் ஐம்பது வருடமாக ஒரு காரியதரிசி நிலைத்து செயல்படுவது இயலாத காரியம். அதை இன்று நிசர்சனமாகப் பார்க்கிறோம். ஆட்டம் போட்ட பெரிய சபாக்களே இன்று ஆட்டம் கண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் யாக்ஞராமன் கின்னஸ் இடம் பெற வேண்டியதுதான். வெகுகாலம் வரை இந்த சபாவுக்கு சரஸ்வதி கடாட்சம் தான் இருந்தது. அண்மையில் வள்ளல் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் அதன் தலைமைப் பதவியை ஏற்று அதற்கு அமோக லட்சுமி கடாட்சமும் வழங்கி இருக்கிறார். இப்போது உள்ள மாபெரும் அரங்கை பார்த்தாலே இது நிதர்சனமாகும். யாக்ஞராமனின் இந்த வெற்றிக்கு காரணம் யார்? அரைத்த மாவையே அரைக்காமல் நவ நவ யுக்திகளை கையாண்டு சபையை தன்னிகரில்லா சபையாக மிளிர வைத்திருக்கிறார். சாதாரணமாய் எழுபது வயதுக்கு மேல்தான் விருது வழங்கும் வழக்கத்தைத் தவிர்த்து நன்றாக இளமையாக செயல்படும்போதே கலைஞர்களுக்கு சங்கீத சூடாமணி, நிருத்ய சூடாமணி போன்ற அழகிய விருதுகளை வழங்கி இளைஞர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறார். இது கௌரவ அட்டை அல்ல. இன்று முன்னணியில் இருக்கும் முக்கால்வாசி இளைஞர்கள் யாக்ஞராமனுக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். சாதாரணமாய் சென்னையில் டிசம்பரில் பதின்மூன்று நாள் காரியம் முடிந்து அப்புறம் அடுத்த ஆண்டு வரை அனந்தசயனம் தான். கிருஷ்ண கான சபாவில் ஆண்டுபூராவும் ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும். அந்த நிகழ்ச்சிகளில் ஆன்மீகத்துக்கும் இடம் உண்டு. ஏன் இவ்வளவு பெரிய அஸ்திரவாரம் என்று கேட்காதீர்கள். யாக்யராமனுடன் எனக்கு ஐம்பது வருடத் தொடர்பு உண்டு. அதில் வசந்தகாலமும் இருந்திருக்கிறது. வேனிற்காலமும் இருந்திருக்கிறது. ஆனால் நட்பு மாறவில்லை. அவருடைய நிர்வாக திறமை பேர்போனது. யாருக்கும் அஞ்சமாட்டார். இந்த ஆண்டு நடக்கும் பொன்விழாவில் எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி. சுமார் இருபது, இருபத்தைந்து வருடங்களுக்கு முன் நிருத்ய சூடாமணி விருதை டாக்டர். பத்மா சுப்ரமணியம் அவர்களுக்கு நான் தலைமை தாங்கி அளித்ததை எனக்கு பசுமையாக நினைவில் இருக்கிறது. மறுமுறை இந்தப் பொன் விழாவில் குச்சுப்பிடி கலைஞர்கள் நரசிம்மசாரி வஸந்தலக்ஷ்மி தம்பதிகளுக்கு நிருத்ய சூடாமணி விருது வழங்கும் விழாவில் நான் பங்கேர்பதில் பெருமையடைகிறேன்.

இந்த தம்பதிகளுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. ஒவ்வொரு நிகழ்ச்சியாவும் புதிய புதிய அம்சங்களை சேர்த்து சோபிக்க செய்துவிடுவார்கள். அது தவிர அவர்கள்

நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிட்டபடி மேனியையும், உடலையும் சீராகக் கூராக வைத்து கொண்டுள்ளார்கள். எனக்கு குச்சிபிடியில் ஈடுபாடு உண்டு. ஏனெனில் அது ஒரு நாட்டிய நாடக பாணி. நல்ல விறுவிறுப்பு சொல்ல வேண்டியதை சீக்கிரம் சொல்லி முடித்துவிடுவார்கள். சஞ்சாரி பாவம் என்ற பெயரில் இழுவரியாகாது. பல வருடங்களுக்கு முன் பிரசித்தி பெற்ற நடனமணி செல்வி ஷோபா நாயுடுவின் குச்சிபுடி நிகழ்ச்சியை இதே சபாவில் கண்டேன். அப்போது அவரை the boneless wonder என்று வர்ணித்ததாக ஞாபகம். ரப்பர் பந்து மாதிரி அவர் புள்ளிமான் போல் துள்ளி விளையாடியதது. அவையோரை மெய்மறக்க செய்தது. ஆனால் கடைசி ஐட்டம் வரும்போது எனக்கு மகத்தான சந்தேகம் வந்துவிட்டது. ஷோபா கையில் தாம்பாளம் ஏந்தி அதை மேடை மீது கொண்டு வந்து வைத்தார். அடுத்தபடி உள்ளே சென்று ஒரு சொம்பு நிறைய தண்ணீர் கொண்டு வந்து அதை சிறிதே கவிழ்த்து மேடையில் தெளித்துவிட்டு தாம்பளத்தின் மேல் வைத்துவிட்டு உள்ளே போனார். எனக்கு ஒரே குழப்பம். மறுபடியும் வெளியே வந்து தண்ணீர்ச் சொம்பை தலையில் வைத்து தாம்பாளத்தின் மேல் இருகால்களையும் பதித்து ஒரு தாலச் சிலம்பம் ஆடி இருக்கிறர் பாருங்கள். அவை அதிர்ந்துவிட்டது. இதுதான் தரங்கமம்.

விருது பெரும் பேராசிரியர் செல்வி N.S. ஜெயலெக்ஷ்மியைப் பற்றி நான் உங்களுக்கு அறிமுகப்படுத்த தேவையில்லை. அவர் பிறந்ததிலிருந்தே ஆலை இலை மேல் பள்ளி கொண்டவர். நான் குறிப்பிவது கலாஷேத்திரா ஆலமரம். அவர் தமையனார் டாக்டர் கோபாலன் எங்கள் குடும்ப மருத்துவர். மற்றொரு தமையனார் பிரசித்தி பெற்ற இலக்கிய ஆசிரியர் N.S. ஜெகந்நாதன். நாட்டிய இலக்கணத்தைக் கரைத்துக் குடித்தவர் என் வாழ்த்துக்கள்.

கிருஷ்ண கான சபாவின் 100 ஆண்டு விழாவுக்கும் நான் வந்து மகிழவேண்டும் என்று இறைவனை பிரார்த்திகிறேன்.